# பதுளை செனரத் பரணவிதாரன பொது நூலகத்தின் உசாத்துணை தகவல் மூல வளங்களின் பயன்பாடு.

# Usage of reference information resources in Senarath Paranavitharana public library, Badulla

**இ. தர்ஷினி[1]**
**E. Dharshani[1]**

## Abstract

In the existing era, there is a high demand and urgent need for access and availability of information. Information is the most important component of human life. The development and growth of an individual or a society is estimated by their level of information capacity. The study mainly aimed to identify the available reference resources in Badulla Senarath Paranavitharana Public Library with specific objectives such as to identify what are the reference resources have been used by the readers of this library, to rectify the users' problems in the usage of the reference resources and also how to increase the usage of reference resources in the library. This study used a survey method to collect data and simple random sampling technique was used to select the sample. Self-administered questionnaires were used to collect data and SPSS software was used for data analysis. Fifty questionnaires were distributed to users and forty five of them responded. The study revealed that, encyclopedias-dictionaries, Brittannica atlas, Guinness book, year books are available in the reference section and the usage of these reference resource are low due to the unawareness of these materilas. Further the study suggests to provide proper guidenence and awareness to the users to increase the usage of reference resources through effective orientation programs, workshops and distributing handbills and newsletters to the public. Also library should give computer and internet facility to the users in reference section to access electronic reference resources.

**Keywords:** Information resources, Reference resources, Badulla Senarath Paranavitharana Public Library.

[1]*கல்விசார் ஒருங்கிணைப்பாளர், சட்டகற்கைகள் திணைக்களம், மனுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்,பதுளை பிராத்திய கற்கை நிலையம், திறந்த பல்கலைக் கழகம், இலங்கை.*
*email:dharshanadharshi13@gmail.com*

## அறிமுகம்

இன்றைய காலகட்டத்தில் நூலகம் மற்றும் தகவல் விஞ்ஞான கற்கைகளில் பெருந்தொகையான ஆய்வு அறிக்கைகள் வெளிவருகின்ற போதும் உசாத்துணை தகவல் வளங்கள் சார்பான ஆய்வுகள் மிக அரிதாகவே இடம்பெறுகின்றன. அதிலும் பதுளை செனரத் பரணவிதாரன பொது நூலகம் சார்பான ஆய்வுகள் மிகவும் அரிதே. இவ்விரண்டையும் இணைத்த வகையில் பதுளை செனரத் பரணவிதான பொது நூலகத்தின் உசாத்துணை தகவல் மூல வளங்களின் பயன்பாடு எவ்வாறு அமைந்துள்ளது பற்றிய ஆய்வாக இவ்வாய்வுக்கட்டுரை அமைகிறது.

அந்தவகையில் நாம் வாழ்கின்ற தற்போதைய தகவல் யுக சகாப்தத்தில் தகவல்களின் விரைவான பெருக்கமானது வளர்ச்சி அபிவிருத்தியில் அதிலும் கல்வி வளர்ச்சியில் பாரியளவு செல்வாக்கைச் செலுத்தி வருகின்றது. மனிதன் தனது பல்வேறுபட்ட நோக்கங்களை அடைவதற்காக எத்துறை சார்ந்த வகையிலுமான தகவலை ஒவ்வொரு கணமும் தேடிக்கொண்டே இருக்கின்றான். தகவலே இன்றைய உலகை ஆட்டிப்படைக்கும் பிரமாண்டமான சக்தியாகும். தகவல்களைப் பெற்றுக்கொள்ளாத நபரோ நாடோ இன்று இரண்டாம் பட்சமே. தகவல்களின் தேவை அதிகரித்ததன் விளைவாக அதனை தேடுவோரின் அதாவது, கேள்வியாளர்கள் மிக வேகமாக அதிகரித்துவருகின்றன. அதற்கமைய மனிதன் தன் வாழ்நாள் முழுவதும் கற்றல் திறன்களை வளர்ப்பதற்கு கல்விசார் ஆதாரங்களின் மையமாக நூலகங்கள் திகழ்கின்றன. இந்நிலையில் இன்று தகவலை பரப்பும் தேவையும் வழிமுறைகளும் அதிகரித்துள்ளன. இப்பணியை மேற்கொள்ளும் பிரதான தளமாக நூலகம் காணப்படுகின்றது. நூலகம் என்பது, அதன் வாசகர்களுக்கு உச்ச பயனை அதாவது, தகவலை வழங்குவதில் அவதானமாக செயற்படுகின்றது. அதற்கமைய நுலக சாதனங்களை ஒழுங்குப்படுத்துவது மிக முக்கியமானதொரு செயற்பாடாகும். எந்தவொரு தகவலையும் தேவையான நேரத்தில், தேவையான வடிவத்தில், தேவையான நபருக்கு வழங்குவதே நூலகத்தின் பணியாகும் (கமால்தீன்.எஸ்.எம். 1992).

## பதுளை செனரத் பரணவிதாரன பொது நூலகம்

அவ்வகையில் நூலங்களில் பொது நூலக வகைக்குள் ஆய்விற்குரிய இந்நூலகம் பதுளை மாநகரின் மையப்பகுதியில் அமைந்துள்ளது. பொதுமக்கள் அதாவது நூலக பாவனையாளர்கள் இலகுவாக பிரவேசிக்கும் வகையில் இதன் அமைவிடம் காணப்படுகின்றமை ஒரு சிறப்பம்சமாகும். அதாவது பதுளை மாநகரின் ரஜ வீதியில் அமைந்துள்ளதுடன் இது 1902 ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதாகும். இதன் தொலைநோக்கு, ‘அறிவில் பூரணத்துவம் பெற்ற சமூகத்தை உருவாக்குவோம்’ என்ற தொனிப்பொருள் அமைந்திருப்பதோடு, இதன் இலட்சிய நோக்கு பின்வருமாறு அமைந்துள்ளது. ‘மக்களுடைய அறிவினைப் போன்றே ஓய்வு நேரத்தையும் மேலும் அர்த்தமுள்ளதாக்குவதற்காக

தகவல்களை ஒருங்கிணைத்து, ஒழுங்கமைத்து பூரண அறிவு நுட்பமுடைய ஒரு சமூகம் எழுச்சி பெறுவதற்காக தரமான மற்றும் பயன்மிகு சேவையினை வழங்குவதே இந்நூலகத்தின் குறிக்கோளாகும்'.

இவ்வாறான இலக்கு மற்றும் நோக்கை அடிப்படையாகக்கொண்டு சேவை வழங்கலை தரமாக மேற்கொள்ளும் ஒரு சிறந்த நிறுவனமாக இந்நூலகம் அமைந்துள்ளது. பதுளை மாநகரிலே அமைந்துள்ள பசுமை நூலகம் இதன் கிளை நூலகமாகும். இது அடிப்படையில் பிரதான நூலகத்தின் ஒரு பிரிவு போன்றே செயற்பட்டுவருகின்றது. மேலும் இந்நூலகத்தில் வழங்கப்படும் சேவைகளை அடிப்படையாகக்கொண்டு பிரிவுகள் பல செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

அந்தவகையில், இந்நூலகத்தில் பத்திரிக்கைப்பிரிவு, சஞ்சிகைப்பிரிவுகள் போன்றவை போயாதினம் மற்றும் அரச விடுமுறை தவிர தினந்தோறும் சேவையை வழங்குகின்றன. இரவல் வழங்கல் பிரிவு, தகவல் தொழில்நுட்பப்பிரிவு, சிறுவர் பிரிவு, உசாத்துணை பிரிவு போன்றவைகளில் வியாழன், போயாதினம் மற்றும் அரச விடுமுறை தவிர ஏனைய தினங்களில் சேவைகள் வழங்கப்படுகின்றன. நடமாடும் நூலகம் தற்காலிகமாக வாகன வசதியின்மையால் தற்போது இடை நிறுத்தப்பட்டுள்ளது. இந் நூலகம் மாநகரின் எல்லைப்பகுதியில் அமைக்கப்பட்டுள்ளதால் அதிகமானோரின் கவனத்தை ஈர்த்துள்ளது. இவ்வகையான நூலக சேவையானது காலை 8.30 தொடக்கம் மாலை 5.15 வரை தொடர்கின்றது.

மேற்கூறியவகையில் ஒவ்வொரு பிரிவுகளினூடாக சேவையை வழங்கிவரும் இந்நூலக பாவனையாளர் வட்டம் அதற்கமைய அமைந்திருக்கின்றது. இந்நூலக அங்கத்தவர்களின் வகையை நூலக சேவை வழங்களின் அடிப்படையில் சிறுவர் அங்கத்துவம், பெரியோர் ஏனையோர் அங்கத்துவம் என இருபெரும் பிரிவுகளில் உள்ளடக்கலாம். சிறியோர் வகைக்குள் ஐந்து வயது தொடக்கம் பதின்மூன்று வயதிற்குட்பட்டவர்கள் உள்ளடக்கப்படுகின்றனர். அத்துடன் பதின்மூன்று வயதிற்கு மேற்பட்டவர்கள் ஏனையோர் அங்கத்துவம் என்ற வகையைச் சார்ந்தவர்களாவர். இதனடிப்படையில் கடந்த வருடம் செப்டம்பர் மாத இறுதிக்குள் இந்நுலகத்தில் அங்கத்துவம் பெற்றவர்களின் எண்ணிக்கையானது, வழங்கல் பிரிவின் மொத்த அங்கத்துவம் - 13,840, சிறுவர் பகுதியின் மொத்த அங்கத்துவம் - 3,900 அதேபோல் உசாத்துணை பிரிவின் மொத்த அங்கத்துவம் - அங்கத்துவம் பெற்ற நிரந்தர வாசகர்கள் இல்லையெனினும் நாளொன்றுக்கு 25 பேர் வீதம் இப்பிரிவை பயன்படுத்துகின்றனர்.

இந்நூலகத்தில் நாளுக்கு நாள் அதிகரிக்கும் வாசகர்களிற்கேற்ப இந்நூலக தகவல் வளங்களின் திரட்டும் அதிகரித்த வண்ணமேயுள்ளது. இதன் மூலமே வாசகர்களுக்கு சிறந்த சேவைகளை இந்நூலகம் வழங்கிவருகின்றது. இங்கு தகவல் வளங்களின் திரட்டு என்ற வகைக்குள் நூல்கள், விசேட தொகுப்பு நூல்கள், பத்திரிக்கைகள், சஞ்சிகைகள், பல்லூடகம் மற்றும் உசாத்துணை

நூல்களும் உள்ளீர்க்கப்பட்டுள்ளன. தகவல் வளங்களில் பிரதான இடத்தைப்பெறுவது நூல்களே. உண்மையில் நூலகம் என்றாலே நூல்களின் தொகுதியே எமக்கு ஞாபகம் வரும். இந்நூலகத்தின் நூல் திரட்டினை நாம் இந்நூலக பிரிவுகளின் அடிப்படையிலும் அப்பிரிவுகளின் வகுக்கப்பட்டுள்ள தமிழ் சிங்கள மற்றும் ஆங்கில மொழிகளின் அடிப்படையிலும் பகுத்து நோக்கலாம். அனைத்து நூல்களும் உலக பிரசித்திப்பெற்ற மற்றும் பெரும்பாலான நூலகங்களில் பயன்பாட்டில் உள்ள தூவி தசம பகுப்பாக்கத் திட்டத்திற்கு அமைவாக பகுக்கப்பட்டு இராக்கையிடப்பட்டுள்ளது. இந்நூலகத்தில் உள்ள நூல்களின் வகைகள் என்றவகையில் சிறுவர் நூல்கள், உசாத்துணை நூல்கள், வழங்கல் பிரிவில் உள்ள நூல்கள் என்ற அடிப்படையிலும் அப்பிரிவுகளில் வெவ்வேறுவகையில் இராக்கையிடப்பட்ட அல்லது அலுமாரியில் வைக்கப்பட்டுள்ள தமிழ் சிங்கள மற்றும் ஆங்கில மொழியின் அடிப்படையிலும் நூல்களின் வகையீடு அமைந்துள்ளதோடு அவை உரிய முறையில் இலக்கமிடப்பட்டு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. இவற்றிற்கு அப்பால் சிறுவர் மற்றும் உசாத்துணை பிரிவுகளில் விசேட நூல் தொகுப்புக்களும் இந்நூலகத்தில் வாசகர்களுக்காக சேகரிக்கப்பட்டு பயன்பாட்டிற்கு வழங்கப்பட்டுள்ளது.

**உசாத்துணை தகவல் வளங்கள்**

இன்று தகவல் மதிப்புமிக்கவையாதலால் அவை சரியான நேரத்தில் சரியான வடிவத்தில் தகவல் பயனாளியை சென்றடைய வேண்டும். இது ஒவ்வொரு நூலகங்களினதும் தலையாய கடமையாகும் அத்துடன் ஒரு நூலகத்தினதும் அதேபோல் ஒரு சமூகத்தினதும் வளர்ச்சி, அபிவிருத்தி இதன் மூலமே மதிப்பிடப்படுகின்றது. இவ்வாறு மனிதனின் அன்றாட வாழ்விலும் அவனது அனைத்து செயற்பாடுகளிலும் ஆதிக்கம் செலுத்துகின்ற தகவலானது தரவுகளால் உருவாக்கப்பட்டது. தரவு (Data) என்பது, உசாவுதல் அல்லது பகுப்பாய்விற்காக சேகரிக்கப்பட்ட உண்மை நிகழ்வுகள் மற்றும் புள்ளிவிபரங்களாக வரையறுக்கப்படுகின்றது. அத்துடன் தகவல் (Information) என்பது, ஏதாவது ஒரு விடயம் தொடர்பாக அல்லது யாராவது ஒரு நபர் தொடர்பாக வழங்கப்பட்ட அல்லது கற்றுக்கொண்ட உண்மைகளாக வரைவிலக்கணம் செய்யப்படுகின்றது.

இவ்வகையான தகவலானது அச்சிடப்பட்ட மற்றும் அச்சிடப்படாத வடிவங்களில் காணப்படுகின்றன. அச்சிடப்பட்டவைகளில் குறிப்பாக நூல்கள், பத்திரிக்கைகள். சஞ்சிகைகள், தகவல் களஞ்சியங்கள், அகராதிகள், பருவ இதழ்கள், பிரசுரங்கள் போன்றவைகளும் அச்சிடப்படாதவைகளுள் இறுவட்டுக்கள், தரவுத்தளங்கள், ஒலி- ஒளிப்பதிவுகளும் உள்ளடங்கும். தகவல் மூலங்களை மேற்கூறியவாறு வரையறுப்பது போன்று பொதுவான தகவல் மூலங்கள் அத்துடன் உசாத்துணை தகவல் மூலங்கள் எனவும் வகைப்படுத்துவர். இவற்றில் உசாத்துணை தகவல் மூலங்கள் என்பது சிறப்பானதொரு வகைக்குள் உள்ளடங்குகிறது. இவை ஆராய்ச்சியாளர்களுக்கும் நுலக பயனாளர்களுக்கும்

தேவையான தகவலை வழங்கும் ஆவணங்களாக இருப்பினும் இவை பொதுவான தகவல் மூலங்களிலிருந்து பெரிதும் வேறுபட்டன.

இவை ஒரு குறிப்பிட்ட வகை சார்ந்த அரிதான தகவல்களை கொண்டிருக்கும், அச்சிடப்பட்ட அதேவேளை மின்னணு வடிவிலும் வெளியிடப்படும், குறித்த உசாத்துணை பயனாளர் ஆவணத்தின் எல்லா பக்கங்களையும் படிக்க வேண்டிய அவசியமில்லை, எளிதாக அணுகக்கூடியவாறு வடிவமைக்கப்பட்டிருக்கும், நூலகத்தின் அமைப்பிற்கும் ஏற்பாடுகளிற்கும் அமைய ஒன்றில் அகர வரிசைப்படியோ அல்லது கால வரிசைப்படியோ காட்சிப்படுத்தப்பட்டிருக்கும். இவை ஒரு ஆராய்ச்சியை தொடங்குவதில் மிகப்பெரிய இடத்தை பெறுகின்றன. காரணம் சுருக்கமாகவும், விரைவாகவும் எளிதாக அணுகக்கூடிய வகையிலும் குறித்த விடயம் சார்ந்த உண்மையான அதிகாரபூர்வமான தகவலை இவை வழங்குகின்றன.

இவ்வகையான உசாத்துணை தகவல் வளங்கள் பல்வேறு வகைப்படும். பொதுவாக இவை நூலகத்தைப் பயன்படுத்த, நுலக பொருட்களைக் கண்டுபிடிக்க, பட்டியலைப் பயன்படுத்த, கணனிகள் மூலம் தகவல்களை அணுகவும் உதவி செய்யவும், நூலக பாவனையாளர்களின் கேள்விகளுக்கு பதில் கூறவும், நூலகப் பொருட்களை அடையாளங்காணவும், விரைவாக கண்டுபிடிக்கக்கூடிய முகவரிகள் புள்ளிவிபரங்கள், தொலைபேசி எண்கள் போன்றவற்றிற்குரிய அதிகாரபூர்வமான உண்மையான தகவல்களை வழங்குவதோடு பின்னணி தகவல்கள், மேலதிகமான தேடல் ஆதாரங்கள், தகவல் தேடலுக்கான தொழில்நுட்ப வழிமுறைகளையும் இவை வழங்குகின்றன. இவ்வாறான தகவல்களை வழங்குகின்ற அகராதிகள், கலைக்களஞ்சியங்கள், பஞ்சாங்கங்கள், அட்லஸ்கள் போன்றவை உசாத்துணை தகவல் வளங்களில் சிலவாகும். இவை தவிர நடைமுறையில் உசாத்துணை வளங்கள் அதிகளவு இருக்கின்றன. பயனர் தனது தேவைக்கேற்ற சரியான மூலத்தை தெரிவு செய்வதன் மூலம் விரைவாகவும் சரியானதுமான தகவலைப் பெறலாம்.

உதாரணமாக சொற்கள் பற்றிய தெளிவிற்கு அதாவது அதன் அர்த்தம் மற்றும் சமமான சொற்களுக்கு அகராதிகள், பொது தகவல் அல்லது தலைப்பின் கண்ணோட்டம் பற்றிய அறிய கலைக்களஞ்சியங்கள் - என்சைக்ளோபீடியா, மக்கள், நிறுவனம், முகவரிகள் பற்றிய தேடலுக்கு வழிகாட்டிகள், பிரசித்திப்பெற்ற மக்களின் பிறப்பு, இறப்பு, சாதனைகள் போன்றவற்றிற்கும் சுயவிபரங்களை அறிய வாழ்க்கை வரலாற்று சுயசரிதைகள், இதேபோன்று திகதிகள் - மக்கள் -இடங்கள் பற்றிய புள்ளவிபர தகவல்களுக்கு பஞ்சாங்கங்கள், நூற்பட்டியல்/ நூலியல் போன்றவைகளும் பயன்படுத்தப்படுகின்றன (Pressley, L & Yun, A.E. 2010).

அதேபோன்று ஒரு தலைப்பின் நடைமுறை தகவல்களைப் பெற கையேடுகள், தொடர்புடைய சொற்களின் ஒத்த – எதிர் சொற்களின் களஞ்சியத்திற்காக

தெசோரி, புவியியல் தொடர்பானவைகளுக்கு அட்லஸ்கள் - வர்த்தமானிகள், தகவல் - நிறுவனம் -நபர் பற்றிய தகவல்களுக்கு கோப்பகங்கள் போன்றவை உசாத்துணை தகவல் வளங்களுக்கு சிறப்பான எடுத்துக்காட்டுக்களாகும். இவ்வொவ்வொன்றிலும் உட்பிரிவுகள் பல காணப்படுகின்றன. உதாரணமாக அகராதியை எடுத்துக்கொண்டால் பொது அகராதி, வரலாற்று அகராதி, சொற்பிறப்பியல் அகராதி, வெளிநாட்டு மொழி அகராதி, பொருள் அகராதி, சிறப்பு அகராதிகள் என்பன அவற்றுள் சிலவாகும். இவ்வாறு மேற்கூறிய ஒவ்வொரு உசாத்துணை வளங்களிலும் இவ்வாறான உட்பிரிவுகளும் உள்ளன. எனவே பயனர் தனது தேவைக்கேற்ற மூலத்தை தெரிவுசெய்ய வேண்டும் அல்லது உசாத்துணை நூலகர் சரியாக வழிநடத்த வேண்டும் ஆயினே பயனர் விரைவாகவும் சரியாகவும் தனது தேவையை நிறைவேற்றிக்கொள்வார். (Elmer E. Rasmuson Library, 2018).

இதற்கேற்ப ஆய்விற்குரிய இந்நூலகத்தின் சேவையில் பிரதானமாக இடம்பெறும் சேவைகளுள் உசாத்துணை சேவையும் ஒன்றாகும். இதற்கிணங்க இந்நூலகத்தின் தனியான ஒரு பிரிவாக உசாத்துணை பிரிவு இயங்கி வருகின்றது. இப்பிரிவில் ஜோன் டியுவியின் பகுப்பாக்கத்திட்டத்தின் அடிப்படையில் பாடவிடயங்கள் வகுக்கப்பட்டும், அதேபோன்று விசேட தொகுப்புக்களாகவும் அவற்றின் தொடரிலக்கங்களுக்கமைவாக பெயரிடப்பட்டு இராக்கையிடப்பட்டுள்ளன. இவை இரவல் வழங்கப்படாமல் அவசியமான தகவல்களை இப்பிரிவிலிருந்து வழங்க பயன்படுத்தப்பட்டு வருகின்றன. இங்கும் தகவல் தொழில்நுட்ப பிரிவில் போன்று வாசகர்களுக்கு கணனிகள் பாவனைக்கான வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. இங்குள்ள நூல்களும் காலத்தின் தேவை மற்றும் வாசகர்களின் தேவைகளுக்கு எற்ப இற்றைப்படுத்தப்பட்டும் வருகின்றமை ஒரு சிறப்பம்சமாகும். காலத்தின் அடிப்படையில் தேவையான பழைய தகவல்களும் இராக்கையிடப்பட்டுள்ளதோடு புதிய தகவல்களும் உள்வாங்கப்பட்டு இப்பிரிவு சிறந்த முறையில் நடாத்தப்பட்டு வருகின்றது.

இப்பரிவில் ஏராளமான விடயங்கள் உரிய முறையில் பாதுகாக்கப்பட்டு அவை வாசகர் தேவைகளுக்கும் வழங்கப்படுவதற்காக, நூலக சேவை வழங்கும் தினங்களில் எவ்வித தடைகளுமின்றி சேவையை வழங்கக்க கூடியளவிற்கு இப்பிரிவு தயார் நிலையிலேயே உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அனைத்து தகவல்களையும் இலகுவாக சென்றடையகூடிய வகையில் வாசகர்களுக்கு வழிகாட்டல்களும் ஆலோசனைகளும் வழங்கப்படுகின்றன. இதன் மூலம் வாசகர் இலகுவாகவும் விரைவாகவும் தகவல்களை அணுக முடிகிறது. அத்துடன் இப்பிரிவில் விசேட நூல்களின் தொகுப்புக்களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றுள் குறிப்பாக, மகாநாம அவர்களின் நூல்கள், சட்டம் சார் நூல்கள், அகராதிகள், நூலக விஞ்ஞானம் சார்ந்தவைகள், ஊவா மாகாணம் தொடர்பான நூல்கள், இலங்கையின் அருமையான நூல்கள் போன்றவாறு சேகரிக்கப்பட்டு பயன்பாட்டிற்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. உசாத்துணை நூல்களின் திரட்டு பேணப்பட்டு வருகின்றன.

இப்பகுதியின் சேவைகள் நூலக வாசகர்களின் கல்வித் தகைமைகளுக்கு அமைவானது. இப்பகுதியில் வாசகர் தனக்கு தேவையான விடயம் தொடர்பான ஆழமான அறிவினை அல்லது மேலதிக அறிவினை பெற்றுக்கொள்ள முடியும். ஆய்விற்குரிய இந்நூலகத்தில் வாசகருக்கேற்ப இப்பகுதி வடிவமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் இப்பகுதியில் தேவையான வளங்கள் உரிய முறையில் பராமரிக்கப்படுவதோடு வாசகர் தேவைகள் இலகுவாகவும் விரைவாகவும் மேற்கொள்ளும் வகையில் இப்பகுதியில் சேவைகள் சிறந்த முறையில் வழங்கப்படுகின்றன.

### ஆய்வின் நோக்கங்கள்

பதுளை செனரத் பரணவிதாரன பொது நூலகத்தின் உசாத்துணை தகவல் மூல வளங்களின் பயன்பாடு என்ற இவ்வாய்வின் நோக்கங்களாக,

1. பதுளை செனரத் பரணவிதான பொது நூலகத்தில் காணப்படும் உசாத்துணை தகவல் வளங்களில் வாசகர்கள் பயன்படுத்தும் உசாத்துணை வளங்களைக் கண்டறிதல்.
2. உசாத்துணை வளங்களை பயன்படுத்துவதில் உள்ள பிரச்சனைகளைக் கண்டறிதல்.
3. உசாத்துணை வளங்களின் பாவனையை அதிகரிக்க மேற்கொள்ள வேண்டிய உபாயங்களைக் கண்டறிதல்.

போன்றவற்றை ஆராயும் நோக்கிலும் அதற்கான பரிந்துரைகளை முன்வைக்கும் நோக்கிலான ஆழமான ஆய்வாக இக்கட்டுரை அமைந்துள்ளது

### ஆய்வு முறையியல்

பொதுவாக ஆய்வு முறையியலானது, தரவு சேகரித்தல் மற்றும் அவற்றை பகுப்பாய்வு செய்தல் என்ற இரு விடயத்தை உள்வாங்கியிருக்கும். அந்தவகையில் இவ்வாய்விற்குரிய தரவு சேகரித்தல் தொடர்பில் பின்வரும் ஆய்வு மூலங்களை உள்ளடக்கியுள்ளன. இத்தேடலானது விஞ்ஞான முறையியலுக்கு இணங்கவே மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதனை உறுதிப்படுத்தும் வகையிலான ஆய்வு முறையியலே பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வாய்வானது, அளவைநிலை ஆய்வு முறையியலைப் (Survey research method) பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்காக இவாய்விற்கான தனித்துவமிக்க வகையில் வினாக்கொத்து தமிழ் மற்றும் சிங்கள மொழியிலும் தயாரிக்கப்பட்டு தகவல்கள் பெறப்பட்டன.

இதனடிப்படையில் முதல்நிலைத் தரவுகளாக இவை பயன்படுத்தப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதன் மூலம் நூலகம், அதனது வளங்கள் மற்றும் சேவைகள் பற்றிய தரவுகள் பெறப்பட்டன. குறிப்பாக, நூலக பாவனையாளர்களின் வகை (சிறுவர் அல்லது பெரியோர்), அவர்களது நூலக

பாவனையின் நோக்கம், பயன்படுத்தும் வளங்கள், உசாத்துணை வளங்கள் அவற்றின் பயன்பாடு மற்றும் எதிர்நோக்கும் பிரச்சனைகள், அவற்றை நிவர்த்தி செய்ய மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள அதேபோன்று நூலக ஆளணியினரிடம் மேற்கொள்ளப்பட்ட நேர்காணல் ஆய்வின் மூலம் உசாத்துணை வளங்கள், அவற்றின் வகைகள், சேகரிப்பு, பகுப்பாக்க நடவடிக்கை, இராக்கையிடல், அவற்றின் பயன்படு தன்மை, எதிர்நோக்கும் பிரச்சனைகள், அவற்றை நிவர்த்தி செய்ய மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் போன்ற விடயங்களும் திரட்டப்பட்டன.

இவ்வாறான ஆய்வு முறையியலினூடாக ஐம்பது (50) வினாக்கொத்துக்கள் பகிரப்பட்டன. அவற்றுள் நூலக பாவனையாளர்களின் மொழிக்கு அமைய நாற்பது (40) சிங்கள மொழியிலானவைகளும் பத்து (10) தமிழ் மொழியிலானவைகளும் பகிரப்பட்டன. இவற்றுள் 35 (87.5%) சிங்கள மொழியிலானவைகளும் பத்து (100%) தமிழ் மொழியிலான வினாக்கொத்துக்கள் மொத்தமாக நாற்பது 40 பூரணப்படுத்தப்பட்டு மீளப்பெறப்பட்டன. இவற்றின் மூலமே இவ்வாய்வு வழிநடத்தப்பட்டுள்ளது.

## பெறுபேறுகளும் கலந்துரையாடல்களும்

எவ்வகை ஆய்வு முயற்சியிலும் தீர்மானிக்கப்பட்ட ஆய்வு முறையியலின் மூலம் அதன் நோக்கங்களுக்கான பெறுபேறுகள் பெறப்படும். அந்தவகையில் இத்தேடலின் மூலமாக பின்வரும் பெறுபேறுகளை அடைக்கூடியதாக இருந்தது. இவ்வாய்வில் பூரணப்படுத்தப்பட்டு மீளப்பெறப்பட்ட வினாக்கொத்துக்களின் மூலம் பின்வரும் விடயங்கள் பெறப்பட்டன.

**அட்டவனை - 01 : பதுளை செனரத் பரணவிதாரன பொது நூலகத்தில் காணப்படும் உசாத்துணை தகவல் வளங்கள்.**

| இல | உசாத்துணை தகவள் வளங்கள் | மொழி | திரட்டு |
|---|---|---|---|
| 01 | The New Encyclopedia – Britannica Ready Reference | ஆங்கிலம் | 12 |
| 02 | The New Encyclopedia – Britannica Macromedia | ஆங்கிலம் | 10 |
| 03 | Home And High School Encyclopedia | ஆங்கிலம் | 15 |
| 04 | The New Encyclopedia – Britannica Knowledge In Depth | ஆங்கிலம் | 17 |
| 05 | The New Encyclopedia – Britannica Outline Of Knowledge | ஆங்கிலம் | |
| 06 | Britannica – Book of The Year World Data | ஆங்கிலம் | 22 |

| | | | |
|---|---|---|---|
| 07 | The New Encyclopedia – Britannica Index A-M, L-Z | ஆங்கிலம் | 032 |
| 08 | The Book Of The Knowledge – Children's Encyclopedia | ஆங்கிலம் | 21 |
| 09 | Our Wonderful World | ஆங்கிலம் | 17 |
| 10 | The Colombia Encyclopedia | ஆங்கிலம் | 05 |
| 11 | Home Library Encyclopedia | ஆங்கிலம் | 10 |
| 12 | Britannica Atlas | ஆங்கிலம் | 01 |
| 13 | The World Of Science | ஆங்கிலம் | 07 |
| 14 | The Book Of Popular Science | ஆங்கிலம் | 10 |
| 15 | Dictionaries (Different Types) | ஆங்கிலம் | 30 |
| 16 | The New American Desk Encyclopedia | ஆங்கிலம் | 01 |
| 17 | Encyclopedia Of Buddhism | ஆங்கிலம் | 01 |
| 18 | Champers Encyclopedia | ஆங்கிலம் | 01 |
| 19 | The Guinness Book Of Records | ஆங்கிலம் | 02 |
| 20 | Our World First Picture Encyclopedia | ஆங்கிலம் | 01 |

மூலம்: பதுளை செனரத் பரணவிதாரன பொது நூலகத்தின் விமர்சன பிரிவிற்கான நூல் சேர்ப்பு இடாப்பு.

அட்டவணை ஒன்றின் படி, இந்நூலகத்தில் காணப்படும் உசாத்துணை தகவல் வளங்களும் அதன் மொழி வடிவமும் அதன் திரட்டும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதற்கமைய பொதுவானவைகளாக அகராதிகள், கலைக்களஞ்சியங்கள் அதிகம் காணப்படுவதோடு அதன் உட்பிரிவுகளில் சிலவும் இந்நூலகத்தில் காணப்படுகின்றது. இதில் பெரும்பாலான கலைக்களஞ்சிய வகையைச் சார்ந்தவையாகும். அதேபோன்று பெருந்தொகையான அகராதிகளும் மொழிகள் ரீதியாக இராக்கையிடப்பட்டுள்ளன.

**அட்டவணை 02 : வாசகர்கள் பயன்படுத்தும் உசாத்துணை வளங்கள்.**

| உசாத்துணை தகவல் வளங்கள் | நாளாந்த வாசகர் பாவனை | வாரத்திற்கான வாசகர் பாவனை | மாதத்திற்கான வாசகர் பாவனை |
|---|---|---|---|
| அகராதிகள் | 01 | 07 | 30 |
| Britannica Atlas | - | 01 | 04 |
| Encyclopedia | | 01 | 04 |

மூலம்: பதுளை செனரத் பரணவிதாரன பொது நூலகத்தின் விமர்சன பிரிவிற்கான வாசகர் பதிவு இடாப்பு.

அட்டவணை இரண்டின் படி, அட்டவணை ஒன்றில் குறிப்பிட்ட அளவான உசாத்துணை தகவல் வளங்கள் இருப்பினும் அவற்றுள் வாசகர்கள்

பயன்படுத்தும் அளவானது மிகவும் சிறிதளவே என்பதை நாம் தீர்மானிக்கலாம். அதிலும் அகராதிகள் நாளாந்த பாவனைக்கான வகையை சார்ந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கதாகும். அதாவது இப்பிரிவில் உசாத்துணை தகவல் வளங்கள் தவிர்ந்த ஏனைய இரவல் வழங்காத முக்கியமான வாசகர்களுக்கு அவசியமானவைகளும் இராக்கையிடப்பட்டுள்ளன. இவற்றின் பாவனையின் போது அகராதிகள் பயன்படுத்தப்படுகின்றன. அகராதிகளுள் சிங்களம் - ஆங்கிலம் - தமிழ் மொழி சார்ந்தவைகளே பயன்படுத்தப்படுகின்றன. அதேபோன்று Britannica Atlas, Encyclopedia போன்றவைகளும் வாராந்த பாவனைக்குரிய உசாத்துணை தகவல் வளமாக பயன்படுகின்றது.

அதேபோன்று இவ்வாய்வின் மூலம் உசாத்துணை தகவல் வளங்கள் மற்றும் இப்பிரிவு தொடர்பான பிரச்சனைகளும் கண்டறியப்பட்டன.

1. இப்பிரதேச மக்களுக்கு குறிப்பாக இந்நூலக பாவனையாளர்களுக்கு உசாத்துணை தகவல் வளங்கள், அவற்றைப் பயன்படுத்தும் முறை மற்றும் அணுகும் முறை பற்றிய போதிய அறிவின்மை மற்றும் தெளிவின்மை சரியான வழிகாட்டலின்மையும் காரணமாகும். உண்மையில் அகராதிகளின் பாவனையும் மிகவும் அரிதே.

2. உண்மையில் இந்நூலகத்தின் உசாத்துணை பிரிவின் அமைப்பும் வாசகர்களுக்கு உசாத்துணை தகவல் வளங்கள் தொடர்பான பிழையான எண்ணத்தை உருவாக்குகின்றது. உண்மையில் இப்பிரிவு வாசிப்பு பிரிவாகவே நடைமுறையில் பயன்படுத்தப்படுகின்றமையும் ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளன. அதாவது இப்பரிவில் ஏறத்தாழ தகவல் வளங்களை தாங்கிய அலுமாரிகள் இருபதிற்கு மேல் இருப்பினும் உசாத்துணை தகவல் வளங்களுக்காக சுவரோடு ஒன்றித்த வகையிலான அலுமாரி ஒன்று மாத்திரமே உள்ளது. அதுவும் உசாத்துணை நூலகரின் இருப்பிடத்தோடு அமைக்கப்பட்டிருப்பதால் வாசகர் அவற்றை அணுகுவதில் உள ரீதியான அச்சத்தை உணர்கின்றனர். இதுவும் இவ்வளங்களின் குறைவான பாவனைக்கு ஒரு காரணமாகும்.

3. இப்பிரதேச மக்களுக்கு அதிலும் கல்வியியலாளர்கள், ஆராய்ச்சியாளர்களின் சதவீதம் குறைவாகவே இருக்கின்றது. அதாவது நூலக பாவனையாளர்களில் தகவல் ஆராய்ச்சி மற்றும் தகவல் தேடலுக்கான ஆர்வம், தகவல் தேடல் நடத்தை மற்றும் ஆய்வு வழக்கம் போன்றன மிக அரிதாக காணப்படும் நிலை ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. குறிப்பாக இந்நூலக பாவனையாளர்களின் நோக்கங்களைப் பொறுத்தவரையில் இரவல் பகுதி, பத்திரிக்கைப்பிரிவு, சிறுவர் பகுதி நோக்கியதாகவே அமைந்துள்ளது.

4. ஆய்வில் உசாத்துணை பிரிவிற்கென நிரந்தர வாடிக்கையாளர் வட்டம் இல்லையெனினும் நாளாந்தம் இப்பிரிவை 25 பாவனையாளர்கள் பயன்படுத்துகின்றனர். இருப்பினும் இவர்களுள் மிகவும் குறைந்தளவினரே

உசாத்துணை வளங்களை பயன்படுத்துகின்றனர். சில தினங்களுக்கு உசாத்துணை தகவல் வள பாவனை இன்மையும் அமையக்கூடும். பெரும்பாலான இப்பிரிவு பாவனையாளர்கள் தங்களது சுய கற்றலுக்காகவே வருகை தருகின்றனர். அவர்கள் தங்களது தனிப்பட்ட தகவல் மூலங்களையே அல்லது இப்பிரிவில் காட்சிப்படுத்தப்பட்ட ஏனைய வளங்களையே பயன்படுத்துகின்றனர். சுருங்கக்கூறின் இப்பிரிவு பெயரளவில் உசாத்துணைக்காக இருப்பினும் யதார்த்தத்தில் வாசிப்பிற்கான பிரவாகவே இயங்கி வருகின்றது.

5. இந்நூலக பாவனையாளர்களில் அதிகம் பாடசாலை மாணவர்களே. பெரியோர் அங்கத்துவ வகைக்குள் பெரும்பாலானோர் இருப்பினும் அவர்களின் நூலக பாவனை இரவல், பத்திரிக்கைப் பிரிவைச் சார்ந்தே இருக்கின்றது. பாடசாலை மாணவர்களைப் பொறுத்தவரையில் தனது நாளாந்த பாடசாலைக் கல்விக்குரிய பாட விடயங்களை கற்கவும், பாடசாலை நேரம் தவிர்ந்த ஏனைய நேரங்களில் தனிப்பட்ட ரீதியில் செல்லும் மேலதிக வகுப்புக்களின் நேர இடைவெளிகளை நிரப்புவதற்காகவும் பாதுகாப்பாகவும் இலகுவாக வந்து செல்லக்கூடிய இடமாகவும் நூலகத்தைப் பயன்படுத்துகின்றனர். ஆயினும் பாடசாலை மாணவர்களோ அல்லது பெரியோர் அங்கத்துவ வகை பயனாளர்களோ அறிந்திராத விடயம் தான் உசாத்துணை தகவல் வளங்கள் அவர்களது தகவல் தேவையை நிறைவேற்றவும் பயன்படுமென்பது.

6. வருடாந்த பாதீட்டு ஒதுக்கீட்டின் போது தேவையான அளவு நிதி இப்பிரிவிற்கென ஒதுக்கீடு செய்யப்படாமையும் கண்டறியப்பட்டது. அதாவது இந்நிறுவனத்தின் அனைத்து நிதி தொடர்பான விடயங்களும் தாய் நிறுவனமான பதுளை மாநகர சபையாலேயே நிர்வகிக்கப்படுகின்றது. இதில் வழங்கல் பிரிவு, சிறுவர் பிரிவு, பத்திரிக்கைப் பிரிவு போன்றவற்றிற்கு வழங்கப்படும் முன்னுரிமை உசாத்துணை பிரிவிற்கு வழங்கப்படுவது ஒப்பீட்டளவில் குறைவாகவே உள்ளது.

7. உசாத்துணை தகவல் வளங்கள் காலத்திற்கு காலம் மாற்றமடைந்து கொண்டே இருப்பதற்கேற்ற வகையில் இந்நூலகத்தில் பேணப்படும் இவ்வளங்களும் காலத்தின் தேவைக்கேற்ப இற்றைப்படுத்தப்படுத்தும் தன்மை குறைவாகவே உள்ளது.

**முடிவுரை**

இந்நூலகத்தைப் பொறுத்தவரை மாநகரின் மையத்தில் ஒப்பீட்டளவில் அமைதியானதொரு இடத்தில் பொதுமக்கள் இலகுவாக வந்து செல்லக்கூடிய வகையில் இந்நூலகம் அமைந்துள்ளது. இதற்கேற்ப வாசகர்களும் நாளுக்கு நாள் அதிகரித்த வண்ணமே உள்ளனர். எந்த வேறுபாடுமின்றி அனைவரும் இந்நூலக வளங்களை உயர்ந்தபட்ச அளவில் பயன்படுத்துகின்றனர். குறிப்பாக இரவல், சிறுவர் மற்றும் பத்திரிக்கைப் பிரிவுகள் அவற்றின் சேவையில்லாத தினங்கள் தவிர ஏனைய எல்லா சேவை தினங்களிலும் நிரம்பியே இருக்கும். இதற்கேற்ப சிறந்த போதுமான தகவல் வளங்கள், சேவைகள், வினைத்திறனான ஆளணியினரும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். இவை மூலம் தனது கடமைகளை செவ்வனே நிறைவேற்றி தனது இலட்சிய பாதையில் இந்நூலகம் சிறப்பாக பயனிக்கின்றது.

இருப்பினும் இந்நூலகத்தின் தகவல் வளங்களின் குறைவான பயன்பாட்டு தன்மையை கொண்டிருப்பது உசாத்துணை வளங்களாகும். ஆனால் நூலக ஆளனியினரால் இப்பிரிவு சிறந்த முறையில் வடிவமைக்கப்பட்டு தகவல் வளங்கள் சிறப்பாக இராக்கையிடப்பட்டு, அவை தெளிவான முறையில் பாவனையாளரை கவரக்கூடிய வகையிலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. பெரும்பாலான உசாத்துணை வளங்கள் இங்கு காணப்படுகின்றன. இவ்வாறான சிறந்த தகவல் சேவையை வழங்க நூலகம் தயாராக இருக்கின்றது. எனவே இப்பிரிவின் செயல்திறன் குறைபாட்டிற்கான பிரதான காரணமாக நாம் ஆராய்ச்சி, தேடல், மேலதிக அறிவு என்பவற்றில் குறைவான அக்கறை கொண்ட வாசகர் சமூகமே.

ஏற்கனவே குறிப்பிட்டப்படி வாசகரின் நூலகப் பாவனை நோக்கம் அவர்களது கல்வி, தொழில், பொழுதுபோக்கு சார்ந்ததாகவேயுள்ளது அதாவது இரவல் பெறல், அவற்றை மீளளித்தல், பத்திரிக்கை வாசித்தல் போன்றவையே இந்நூலக வாசகர்களின் நூலக செயற்பாடுகளாகும். மிகவும் அரிதான வாசகர் வட்டமே மேலதிக உசாத்துணை தகவல் பாவனைக்குரிய நோக்குடன் நூலகத்தை நாடுகின்றனர்.

**பரிந்துரைகள்**

இவ்வாய்வில் இருந்து பின்வரும் பரிந்துரைகள் வழங்கப்படுகின்றன.

- உசாத்துணை தகவல் வளங்கள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
- உசாத்துணை தகவல் வளங்களின் ஏனைய வகைகளையும் அதன் இற்றைப்படுத்தப்பட்ட உப பிரிவுகளையும் கொள்வனவு செய்து பாவனைக்கு விடல்.

- இவ்வளங்கள் தொடர்பான பூரணமான முழுமையான அறிவை உசாத்துணை நூலகருக்கு வழங்குதல். இதன் மூலமே நூலகத்தின் இப்பிரிவிற்கு வருகை தரும் பாவனையாளர்களை சரியாக வழிநடத்த முடியும்.
- இந்நூலகத்தில் அதிகம் பாடசாலை மாணவர்களும் ஏனையோர்களும் நிரந்தர அங்கத்துவம் பெற்றிருப்பதால் அவர்கள் பயன்படுத்தக்கூடிய வகையிலான உசாத்துணை தகவல் வளங்களை கொள்வனவு செய்தல் மற்றும் அவற்றை வாசகர் அதிகம் இருக்கும் இடங்களில் காட்சிப்படுத்தல்.
- வருடாந்த பாதீட்டு ஒதுக்கீட்டின் போது தேவையான அளவு நிதியை இப்பரிவிற்கு ஒதுக்கீடு செய்தல். உசாத்துணை தகவல் வளங்களின் முக்கியத்துவம் பற்றி பாதீட்டு தீர்மானக் குழு கூட்டங்கள் மற்றும் ஏனைய சந்தர்ப்பங்களில் நூலக ஆளணியினருக்கும் ஏனைய குழு அங்கத்தவர்களும் எடுத்துக்கூறல். இதன் மூலம் இப்பிரிவிற்கான வாசகரை அதிகரிப்பதற்கான செயற்பாடுகளையும் திட்டமிட்டு செயல்படுத்த முடியும்.
- உசாத்துணை தகவல் வளங்கள் காலத்திற்கு காலம் மாற்றமடைந்து கொண்டே இருப்பதால் நூலகத்தில் பேணப்படும் இவ்வளங்களும் காலத்தின் தேவைக்கேற்ப இற்றைப்படுத்தப்பட்டுக் கொண்டே இருக்க வேண்டும். இது தொடர்பில் இந்நூலகம் அதிகம் கரிசனை செலுத்த வேண்டும்.
- உசாத்துணை தகவல் வளங்கள் மின்னனு வடிவிலும் அணுகக்கூடிய வசதி இருப்பதால் இந்நூலகத்திலும் அவ்வசதியை பாவனையாளர்களுக்கு ஏற்படுத்தினால் இப்பிரிவின் கவர்ச்சி மற்றும் உற்பத்தித்திறன் மேலும் அதிகரிக்கும். வாசகரின் ஈடுபாடு கட்டாயம் அதிகரிக்கும். இருப்பினும் கணினி மற்றும் இணைய வசதிகளை வழங்கும் போது வாசகர்கள் அவற்றை சரியான விதத்தில் பயன்படுத்துகின்றனரா என்பதில் அவதானமாக இருக்க வேண்டும். சிலவேளைகளில் வாசகர் அதனை தவறாகவும் பன்படுத்தக்கூடும்.
- நூலகம் சார்ந்த அறிமுக நிகழ்வுகளில் உசாத்துணை வளங்கள் தொடர்பான விடயங்களையும் வழங்குதல்.
- இப்பிரிவில் உசாத்துணை தகவல் வளங்களின் காட்சிப்படுத்தல் மற்றும் திரட்டல் என்பவற்றை வாசகரின் இலகுவாக அணுகக்கூடிய வகையில் காட்சிப்படுத்துவதன் மூலம் நூலக பாவனையாளர்களை மேலும் ஈர்க்க முடியும்.

இவ்வாறான பரிந்துரைகளை செயற்பாட்டில் கொண்டுவரும் போது இந்நூாலகத்தின் எல்லாப் பிரிவுகள் போலவும் உசாத்துணை பிரிவும் வினைதிறனான செயற்படும். இதன் பிரதிபலனானது நூலகத்திற்கு நன்மையளிப்பதைப் போலவே இப்பிரதேச மக்களின் அறிவு, ஆற்றல்,

மனப்பாங்கு, கல்வி மட்டம், தொழில்வாய்ப்பு, வாழ்வாதாரம், வாழ்க்கை முறை மற்றும் அவர்களது அனைத்து செயற்பாடுகளிலுமே ஒரு நல்ல வளர்ச்சி பாதைக்கு இட்டுச்செல்லும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இப்பிரதேச மக்களும் மேலதிக அறிவு, தகவல் தேடல், ஆராய்ச்சி அபிவிருத்தி நோக்கி வளர்ச்சியடைவர். இதன் மூலம் இந்நூலகத்தின் தொலைநோக்கான அறிவில் பூரணத்துவம் பெற்ற சமூகத்தை உருவாக்குவோம் என்ற இலக்கை இலகுவாக அடையலாம். இது இப்பிரதேசத்திற்கும் அதேவேளை எமது நாட்டிற்கும் ஒரு சிறந்த ஆரம்பமாக அமையும்.

**உசாத்துணைகள்**

அருளானந்தம், ஸ்ரீ. (2008). *நூலக தகவல் அறிவியல் ஆய்வுக் கோவை.* சேமமடு பதிப்பகம்.

கமால்தீன்.எஸ்.எம். 1992, நூலும் சமூகமும், ஆணைக்கோட்டை: அயோத்தி நூலக சேவைகள்.

பதுளை செனரத் பரணவிதாரன பொது நூலகம். (2018) *உற்பத்தித்திறன் :அகில இரங்கை ரீதியாக நடாத்தப்படும் போட்டிக்காக இந்நூலகத்தினால் தயாரிக்கப்பட்டது* , பதுளை: பதுளை செனரத் பரணவிதாரன பொது நூலகம்.

மைதிலி, விசாகரூபன். (2004). *நுலகமும் சமூகமும்.* மலர் பதிப்பகம்.

Elmer E. Rasmuson Library. (n.d.). Retrieved November 25, 2019, from https://library.uaf.edu/ls101-reference-services

Pressley, L and Yun, A.E. (2010). Reference Resources, In *Research Like a Librarian*. Retrieved from https://cloud.lib.wfu.edu/blog/research-like-a-librarian/reference-resources/